# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, திறைசேரிச் செயலாளர் (பிரதிநிதி ஒருவரின் பெயர் குறித்த நியமனம்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2010 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, திறைசேரிச் செயலாளர் (பிரதிநிதி ஒருவரின் பெயர் குறித்த நியமனம்) சட்டம்

*[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 34/2010*

***சட்டவாக்கத்தால் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின், அதிகார சபையின், சபையின் அல்லது நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக திறைசேரிச் செயலாளர் இருக்க வேண்டுமென அத்தகைய சட்டவாக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் திறைசேரிச் செயலாளர் தமது பிரதிநிதியாக நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித் தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சிலிருந்து அல்லது திறைசேரியின் ஏதேனும் திணைக்களத்திலிருந்து ஆள் ஒருவரைப் பெயர் குறித்து நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளை வான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

சட்டவாக்கத்தால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவின், அதிகார சபையின், சபையின் அல்லது நிறுவனத்தின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு திறைசேரிச் செயலாளர் அத்தகைய சட்டவாக்கத்தால் நியமிக்கப்படுவது நடைமுறையில் இருந்துள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் அவரது பதவியின் பயனைக்கொண்டு அவரால் பிரயோகிக்கப்படவும் நிறைவேற்றப்படவும் தேவைப்படுத்தப்பட்ட பல்திறப்பட்ட தத்துவங்கள் மற்றும் பணிகள் காரணமாக, பிரதானமாக நேரம் தொடர்பாக திறைசேரிச் செயலாளர்மீது சுமத்தப்பட்ட நெருக்கடிகள் அதன் உறுப்பினர் என்ற அவரது தன்மையில் அத்தகைய குழு, அதிகாரசபை, சபை அல்லது நிறுவனம் ஒவ்வொன்றினதும் கூட்டங்களுக்கு திறைசேரிச் செயலாளர் வருகை தருவது பெரும்பாலும் சாத்தியமற்றதாகுவதாலும்:

அத்துடன், திறைசேரிச் செயலாளர் அத்தகைய குழுவில், அதிகாரசபையில், சபையில் அல்லது நிறுவனத்தில் அவரது பிரதிநிதியாக இருப்பதற்கு ஆளொருவரைப் பெயர்குறித்து அவர் நியமிப்பதற்கு இயலக்கூடியவராயிருப்பதற்குச் சட்ட ஏற்பாடு செய்வது அவசியமாகின்றதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, திறைசேரிச் செயலாளர் (பிரதிநிதி ஒருவரின் பெயர்குறித்த நியமனம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*திறைசேரிச் செயலாளர் அவரது இடத்திற்கு பிரதிநிதி யொருவரை பெயர்குறித்து நியமிப்பதற்கு உரித்துடைய வராதல்.*

**2**. விடயத்திற்கேற்ப, ஏதேனும் குழுவின், அதிகாரசபையின், சபையின் அல்லது நிறுவனத்தின் உறுப்பினரொருவராக திறைசேரிச் செயலாளரை நியமனம் செய்வதற்கு அல்லது பெயர்குறித்த நியமனம் செய்வதற்கு அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டம் ஏற்பாடு செய்துள்ளவிடத்து, திறைசேரிச் செயலாளர் ஒன்றில் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சிலிருந்து அல்லது பொதுத் திறைசேரியின் ஏதேனும் திணைக்களத்திலிருந்து அத்தகைய குழுவில், அதிகாரசபையில், சபையில் அல்லது நிறுவனத்தில் அவரது பிரதிநிதியாக இருப்பதற்கென பொருத்தமான ஆள் ஒருவரை பெயர் குறித்து நியமிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், திறைசேரிச் செயலாளர் (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச் சபையினதும் மற்றும் அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவினதும் கூட்டங்களுக்கு வருகை தருமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*பெயர்குறித்த நியமனம் செல்லுபடியாதல்.*

**3**. இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் திறைசேரிச் செயலாளர் விடயத்திற்கேற்ப, ஏதேனும் குழுவில், அதிகாரசபையில், சபையில் அல்லது நிறுவனத்தில் அவரது பிரதிநிதியாக இருப்பதற்கென எவரேனும் ஆளை பெயர் குறித்து நியமித்திருக்குமிடத்து, அத்தகைய பெயர்குறித்த நியமனம் செல்லுபடியாதலும் பயனுறுதியுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயர்குறித்த நியமனம் இச்சட்டத்தின் நியதிகளின்படி செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்